**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.88/2021**

**Prosecution witness : அ.சா.9** **Date : 16.12.2024**

| | |
|---|---|
| **Name : சரவணன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 3 present. ) (Accused 1, 2 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பி.என்.பட்டியில் குடியிருந்து ஓட்டல் வைத்து நடத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ராஜா என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். எங்கு வைத்து எதற்காக கையொப்பம் செய்தேன் என்பது எனக்கு நினைவில்லை. அதில் உள்ள விவரம் எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் மட்டும் **அ.சாஆ.12 ஆகும்.** என்னிடம் காட்டப்படும் கடந்த 24.10.2017ம் தேதிய கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதானா என்றால் ஆமாம். எங்கு வைத்து எதற்காக கையொப்பம் செய்தேன் என்பது எனக்கு நினைவில்லை. அதில் உள்ள விவரம் எனக்கு தெரியாது. கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையொப்பம் மட்டும் **அ.சாஆ 13 ஆகும்.**

2. என்னுடன் வேலு என்பவர்கையொப்பம் செய்தாரா என்றால் எனக்கு தெரியாது. என் முன்பாக TN 90 B 0372 Bajaj Pulsar இருசக்கரவாகனம் மற்றும் இரண்டு வெள்ளி குத்துவிளக்கு கைப்பற்றப்பட்டதா என்றால் நான் காவல் நிலையத்திற்கு வேறு விசியமாக போலீசார் கையொப்பம் கேட்டதால் நான் கையொப்பம் செய்தேன். வேறொன்றும் தெரியாது. ராஜா என்பவரை நான்

பார்த்ததில்லை. போலிசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–

3) கடந்த 24.10.2017ம் தேதிய காலை 10.00 மணிக்கு மகுடஞ்சாவடி இளம்பிள்ளை பேருந்து நிலையத்திற்கு எதிரே உள்ள ஐய்யங்கார் பேக்கரி அருகில் வைத்து எதிரி ராஜா என்பவரை எங்கள் முன்னிலையில் விசாரித்தபோது எதிரி ராஜா தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தபோது நானும் வேலு என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம் என்றால் இல்லை.

4. கடந்த 24.10.2017ம் தேதி காலை 11.30 மணிக்கு நானும் வேலு என்கிற மாரிமுத்து என்பவரும் எதிரி ராஜா தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தபோது அதன் பின்னிட்டு மகுடஞ்சாவடி இளம்பிள்ளை பேருந்து நிலையத்திற்கு எதிரே உள்ள ஐய்யங்கார் பேக்கரி அருகில் கைப்பற்றப்பட்டது. அவ்வாறு தயாரிக்கப்பட்ட கைப்பற்றுதல் மகசரில் நானும் வேலு என்கிற மாரிமுத்து என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம் என்றால் இல்லை. நானும் வேலு என்கிற மாரிமுத்து என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்துவிட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.